# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
***********

முறையீட்டு மனு எண்: 13/2018/பே
ஆணை நாள். 27 –08–2018

செ.பொன்னையா,
4–2–34D, பள்ளிவாசல் தெரு,
நிலக்கோட்டை,
திண்டுக்கல் மாவட்டம்–624 208. -- முறையீட்டு மனுதாரர்.

1.செயல் அலுவலர்,
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.
2.உதவிப் பொறியாளர்,
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம். -- எதிர் மனுதாரர்கள்.

ஆணை.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சி, 4–2–34–D, பள்ளிவாசல் தெருவினைச் சேர்ந்த, திரு.செ.பொன்னையா, என்பவரின் 19.01.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.01.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.013/2018 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பேரூராட்சியில், புல எண்.116ல் உள்ள கொங்கர் குளம் அருகில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் விதிமுறைகளை மீறி பேரூராட்சியால் பொதுக்கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளதாகவும், மேற்படி பகுதியில் பேரூராட்சியின் கழிவு நீர், நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்பாட்டிற்கான திறந்தவெளி கிணறு அருகில் சேர்ந்து, நிலத்தடி நீர் மாசு படுவதாக தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

02.02.2018ம் நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

02.03.2018ம் நாளிட்ட அழைப்பாணை மூலம், மேற்கண்ட முறையீட்டு மனு தொடர்பான தங்களது விளக்கங்களை பதிவு செய்ய, இம்முறைமன்ற நடுவத்தில் 02.05.2018 அன்று ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரர், நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி உதவிப் பொறியாளர் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

02.05.2018 ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில், நிலக்கோட்டை பேரூராட்சி, புல எண்.116ல் உள்ள கொங்கர் குளம் பகுதியில் விதிகளை மீறி பொதுக்கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சியின் அன்றாட கழிவு நீர் மேற்படி பொதுக்கழிப்பிடம் பகுதியில் நீர்ப்பிடிப்பு பகுதியில் விடப்படுவதாகவும், மேற்படி இடத்தின் அருகில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான திறந்தவெளி குடிநீர் கிணறு அமைந்துள்ளதாகவும், அப்பகுதியில் மேற்படி கழிவு நீர் கலப்பதாகவும் தெரிவித்துள்ளார். கழிவு நீர் கலந்த கிணற்று நீரை பொதுமக்களுக்கு விநியோகம் செய்து வருவதாகவும், அதை தடுத்து நிறுத்தவேண்டும் எனவும், கழிப்பிடம் கட்டும்போதே தன்னுடைய ஆட்சேபணையினை தெரிவித்ததாகவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

02.05.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.மு.கோட்டைச்சாமி மற்றும் உதவிப் பொறியாளர் திரு.M. ஜெயகிருஷ்ணா இருவரும் ஒரு வார காலத்திற்குள் முறையீட்டு மனுதாரருடன் நேரில் சென்று மேற்படி இடத்தினை ஆய்வு மேற்கொண்டு தங்களது அறிக்கையினை சமர்ப்பிப்பதாக தெரிவித்தார்கள்.

நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் 06.06.2018ம் நாளிட்ட கடிதத்தில், மேற்படி முறையீடு தொடர்பாக முறையீட்டு மனுதாரரை நேரில் ஆஜராகச்செய்து விசாரணை மேற்கொண்டதில், கொங்கர்குளம் கண்மாய் பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்பு கொட்டப்பட்டிருந்த குப்பைகள் டிப்பர் லாரி மூலம் 93 முறைகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் பேரூராட்சி பகுதி கழிவுநீர், குளத்தில் நேரடியாக கலப்பதை தடுக்கும் பொருட்டு பேரூராட்சி மற்றும் திரவக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் சுத்திகரிப்பு செய்து விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், குளக்கரையில் பொது சுகாதார அத்தியாவசியம் கருதி அமைக்கப்பட்டுள்ள ஆடு அடிக்கும் தொட்டி மற்றும் பொது கழிப்பிட வளாகங்கள், இனி வருங்காலத்தில் அரசு அனுமதி மற்றும் நிதியுதவி பெற்று வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், குளத்தின் கரையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அமைக்கப்பட்டுள்ள கிணற்றின் நீர் தற்சமயம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுவதில்லை எனவும், கழிப்பறை பயன்பாட்டிற்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது என உறுதியளித்ததின்பேரில், முறையீட்டு மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும், இது தொடர்பாக, மனுதாரர் எழுத்து மூலமாக தெரிவித்துள்ள

கடிதத்தினையும் இணைத்து தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

நிலக்கோட்டை பேரூராட்சி உதவிப் பொறியாளரும் தனது 28.05.2018ம் நாளிட்ட கடிதத்தில் மேற்படி முறையீடு தொடர்பாக, நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ள கருத்துக்களையே தெரிவித்துள்ளதுடன், முறையீட்டு மனுதாரர் மேற்படி முறையீடு தொடர்பாக உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்தில் அளித்துள்ள புகார் மனு மீது மேல் நடவடிக்கை தொடரவேண்டாம் என எழுத்து மூலமாக பேரூராட்சி செயல் அலுவலருக்கு முகவரியிட்ட கடித்தின் நகலினை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 19.06.2018ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக நிலக்கோட்டை பேரூராட்சி உதவிப் பொறியாளரின் கூடுதல் விளக்கங்களை பெறவேண்டி இம்முறைமன்ற நடுவத்தில் 16.08.2018ல் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 19.06.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையில், மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக, நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் 06.06.2018ம் நாளிட்ட விளக்க அறிக்கையின் நகலினை முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதன் மீதான விளக்கம்/ஆட்சேபணை ஏதுமிருப்பின், அதன் விவரங்களை ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் திரு.செ.பொன்னையா, தனது 02.07.2018ம் நாளிட்ட கடிதத்தில், நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் நிலக்கோட்டை பேரூராட்சி, கொங்கர்குளம் பகுதியில் கட்டப்பட்டுள்ள கழிப்பறை அருகில் உள்ள திறந்தவெளி கிணற்று நீர் மாசு படுவது தொடர்பாக தனது முறையீட்டினையடுத்து, திறந்தவெளி கிணற்றின் மின் மோட்டார்களை அகற்றி பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், மேற்படி கிணற்று நீரை பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்படுவதில்லை என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து மேற்படி நீர்ப்பிடிப்புப் பகுதியில் கழிவு நீர் தேங்கி, மழைக்காலம் வருவதற்குள் ஆழ்துளை கிணறுகள் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகள் மாசுபடாமல் இருக்க நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்க பேரூராட்சி செயல் அலுவலருக்கு உத்திரவிடக் கோரி தனது கூடுதல் விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 19.06.2018ம் நாளிட்ட அழைப்பாணையின்படி இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நிலக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர், மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் தங்களது விளக்கத்தில் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் முழு திருப்தியடைந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் திறந்தவெளி கிணற்றுப் பகுதியில் கட்டப்பட்டுள்ள பொது கழிப்பிட மின் மோட்டாரை பேரூராட்சி செயல் அலுவலரால் அப்புறப்படுத்தப்பட்டிருந்தாலும், மேற்படி பகுதியில் பேரூராட்சியின் கழிவு நீர் தேங்கி நிலத்தடி நீர் மாசுபடுவதை தடுக்கவும், மேலும் வரும் மழைக்காலத்திற்கு முன்னர் இப்பணியினை மேற்கொள்ளவும் கோரியுள்ளார். எனவே முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளவாறு வரும்

மழைக்காலத்திற்குள் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் கழிவு நீர் தேங்காவண்ணம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலருக்கு வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் கிணறு உள்ள பகுதியில் பொது கழிப்பிடப் பணிக்கான இடம் தெரிவு செய்த சம்பந்தப்பட்ட பொறியாளர் மற்றும் செயல் அலுவலரின் விளக்கத்தினை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது..

2018 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணையின்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்.

1.செ.பொன்னையா,
4–2–34D, பள்ளிவாசல் தெரு,
நிலக்கோட்டை,
திண்டுக்கல் மாவட்டம்–624 208.

2.செயல் அலுவலர்,
நிலக்கோட்டை பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகள் இயக்குநரகம்,
குறளகம், சென்னை –108.

4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திண்டுக்கல் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல்.